**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 246 of 2024

Deposition of D.W. 1

Name of the Witness: திரு.மூர்த்தி

Date : 03.09.2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அப்பா பெயர் பழனிகவுண்டர். என் அம்மா பெயர் சின்னம்மாள். என் அம்மா இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி. 1ம் பிரதிவாதி என்னுடைய அம்மா, அப்பாவிற்கு மூத்த மகன் என்றால் சரிதான். நான் 2வது மகன், 3வதாக வாதி மகள். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் அண்ணன் 1ம் பிரதிவாதி PUC வரை படித்துள்ளார். வாதி 10ம் வகுப்புவரை படித்துள்ளார். வாதி 5ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றாலும், நான் தான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ராசிபுரம் தாலுக்கா, தாட்டன்குட்டையில் தான் படித்தேன், 1ம் பிரதிவாதியும் அங்கேயே தான் படித்தார், வாதி புலிகரையில் படித்தார். வாதிக்கு 3 மகள்கள். வாதியின் மூத்த மகளுக்கு 32, 33 வயதிருக்கும் என்றால் சரிதான். எனக்கு ஒரு மகன், ஒரு மகள். என் மகன் மூத்தவன். அவர்கள் இந்த வழக்கில் 4, 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு 28 வயதிருக்கும் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 2, 3 வருடம் கழித்து தான் 4ம் பிரதிவாதி பிறந்தார். வாதிக்கு திருமணமாகி 30, 32 வருடங்கள் இருக்கும் என்றால் சரியல்ல.

அவருக்கு 1987ல் திருமணமானது. நான் சொல்வது தவறு என்றாலும் வாதிக்கு 1990ல் தான் திருமணமானது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு 1988, 1989ல் திருமணமானது. எனக்கும், வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் என் அப்பா தான் திருமணம் செய்து வைத்தார்.

2) 7ம் பிரதிவாதியின் அக்கா 6ம் பிரதிவாதியை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் மகன் BE முடித்து 3 வருடம் இருக்கும். என் மகன் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறார். நான், என் மனைவி, மகன் எல்லோரும் ஒரே குடும்பமாக இருக்கிறோம். என் அப்பா 1ம் இன சொத்தான சர்வே எண் 2/1ல் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. சர்வே எண் 1ல் தான் குடியிருந்து வந்தார். சர்வே எண் 1ல் குடியிருந்து வந்து தான் என் அப்பா எங்கள் மூவருக்கும் திருமணம் செய்து வைத்தார். திருமணம் ஆவதற்கு முன்பாக வாதி எங்கள் அம்மா, அப்பாவுடன் தான் இருந்து வந்தார். 1ம் பிரதிவாதிக்கு ஒரு லட்சமும், எனக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் திருமணத்திற்கு செலவு செய்தார். வாதிக்கு திருமணத்தின் போது 50 பவுன் நகையும், ரூ.50 ஆயிரம் பணமும் செலவு செய்யப்பட்டது. வாதிக்கு 50 பவுன் நகையும், ரூ.50 ஆயிரம் பணமும் செலவு செய்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) வாதி போட்ட வழக்கிற்கு நான், 4 முதல் 7 பிரதிவாதிகள் சேர்ந்து ஒன்றாக தான் பதிலுரை 03.12.2024ல் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதி கருணாநிதி சொத்து அவருக்கு பாத்தியம் என அசல்

வழக்கு எண் 109/2022 என்ற வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் சொல்லி கருணாநிதி வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. நானும், 7ம் பிரதிவாதி கருணாநிதியும் ஒரே வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துகிறோம் என்றால் சரியல்ல. நானும், கருணாநிதியும் வாய்தாவிற்கு ஒன்றாக வருகிறோம் என்றால் சரியல்ல.

4) என் அப்பாவின் பூர்வீகம் ராசிபுரம் தாலூக்கா தாட்டான்குட்டை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 2 1/2 ஏக்கர் நிலம் பூர்வீகமாக இருந்தது என்றால் சரியல்ல. என் அப்பா போத்தலஅள்ளி கிராமத்தில் சொத்துக்கள் எதுவும் வாங்கவில்லை. என் அப்பா 17.03.1974ல் தாவா 1ம் இன சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் சரியல்ல. சாட்சியிடம் வா.சா.ஆ.1 அசல் கிரைய பத்திரத்தை காட்டிய போது வாங்கியிருக்கலாம் என்று சொல்கிறார். சர்வே எண் 1ஐ நான், என் அப்பா, என் அண்ணன் எல்லோரும் குமாரசாமி என்பவரின் நிலத்தை குத்தகை எடுத்து வந்த ஓட்டி அதில் வந்த பணத்தில் வாங்கினோம். மேற்சொன்ன விவரத்தை என்னுடைய பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை.

5) 17.03.1974ல் சொத்து வாங்கிய பின்னிட்டு 4 ஏக்கர் 1 சென்ட் 10 வருடம் கழித்து வாங்கப்பட்டது. அந்த 4 ஏக்கர் 1 சென்ட் நான் வாங்கினேன். நான் விவசாயம் செய்தும், கடன் பெற்றும் அந்த நிலத்தை வாங்கினேன். நான் எம்.எல்.ஏ நிலத்தில் விவசாயம் செய்து வந்த பணத்தில் நிலத்தை வாங்கினேன். 4 ஏக்கர் 1 சென்ட்டை தனிப்பட்ட

முறையில் நான் வாங்கியதாக சொல்வதே தவறு என்றால் சரியல்ல. நான் என்னுடைய பதிலுரையில் நானும், எனது அப்பாவும் சேர்ந்து தான் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் தான் வாங்கினேன். 4 ஏக்கர் 1 சென்ட் வாங்கும் போது எனக்கு 30 வயதிருக்கும். 1974ல் சொத்தை வாங்கிய பிறகு என் அப்பா 1980ல் சர்வே எண் 394/2ல் 1 ஏக்கர் 15 சென்ட்டும், சர்வே எண் 394/3ல் 2 ஏக்கர் 82 சென்ட் வாங்கினார் என்றால் சரிதான், அதை என் அண்ணனுக்கு கொடுத்து விட்டார்.

6) தாவா 2ம் இன சொத்தை என் அப்பா என் பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் வாங்கினார் என்றால் சரியல்ல, நானும், 1ம் பிரதிவாதியும் தனிதனியாக வாங்கினோம். அந்த சொத்தை நான் ரூபாய் 1 லட்சத்திற்கு வாங்கினார். 1ம் பிரதிவாதியும் ரூபாய் 1 லட்சத்திற்கு தான் வாங்கினார். என் அண்ணன் அவருடைய மனைவியின் நகையை விற்று நிலத்தை வாங்கினார். நானும் என் மனைவியின் நகையை விற்றும், என் மாமனாரிடம் கடன் வாங்கி நிலத்தை வாங்கினேன். நான் 3 ஏக்கர் நிலமும், 1ம் பிரதிவாதி 3 ஏக்கர் நிலமும் வாங்கினோம். நானும், என் அண்ணன் 1ம் பிரதிவாதியும் இரண்டு பத்திரங்களாக ஒரே தேதியில் வாங்கினோம். நானும், 1ம் பிரதிவாதியும் வாங்கிய கிரய ஆவணங்களில் என் அப்பா சாட்சி கையெழுத்து போடவில்லை. தாவா 2ம் இன சொத்தை நானும், 1ம் பிரதிவாதியும் தனி தனியாக வாங்கியதாக

சொல்வதே தவறு என்றால் சரியல்ல. அந்த கால கட்டத்தில் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் திருமணமே ஆகவில்லை என்றால் சரியல்ல.

7) என் அப்பா தாவா 1ம் இன சொத்திலிருந்து வந்த வருமானத்திலிருந்தும், சர்வே எண் 1ல் 4 ஏக்கர் 34 சென்ட், சர்வே எண்.734/2ல் 1 ஏக்கர் 15 சென்ட், சர்வே எண் 734/3ல் 2 ஏக்கர் 82 சென்டில் வந்த வருமானத்தை தான் என் அப்பா என் பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் தாவா 2ம் இன சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றாலும் கிரைய பத்திரத்தில் ரூபாய் 50ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அரசாங்க மதிப்பு அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தில் கிரைய தொகை ரூபாய் ஒரு லட்சம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா 2ம் இன சொத்து ஒரே சொத்தாக உள்ளது என்றாலும், அதனால் தான் பட்டா என் பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரியல்ல. அந்த கூட்டுபட்டா வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8) என் அப்பா பாகம் பிரிக்கும் போது எனக்கு 30 வயதிருக்கும். கல்யாணம் ஆன பிறகு தான் பாகம் பிரிக்கப்பட்டது. பாகம் பிரிக்கும் போது வாதிக்கு திருமணமாகி இருந்தது. 2000, 2002ல் பாகம் பிரிக்கப்பட்டது. எனது அப்பா பாகமாக 4 ஏக்கர் 4 சென்ட் பிரித்து கொடுத்தார். 1ம் பிரதிவாதிக்கு என் அப்பா 8 ஏக்கர் பாகமாக

கொடுத்தார். பாகபிரிவினையில் என் அப்பா தனக்காக சொத்துக்கள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. பாக பிரிவினை காலத்தில் பணம் எதுவும் பொது குடும்பத்தில் இல்லை. என் அப்பா 9.3.2007ல் இறந்து விட்டார். என் அப்பா 2ம் இன சொத்தில் குடியிருந்து தான் இறந்து விட்டார் என்றால் சரிதான்.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)